**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**O.S. No. 117/2009**

**C/W**

**O.S.167/2021**

2023 ஆம் வருடம் ஜூலை மாதம் 10 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | விவேகானந்தன் (பி.வா.சா.–5) | தொழில் | : |
| த/பெ., க/பெ. | : | | வயது | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலுகா | : | | நாள் | : 10.07.2023 |
| மாவட்டம் | : | | | |

**முதல் விசாரணை:– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.)**

நான் வழக்கின் 3–ம் நபர். சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து எனக்கு சம்மன் வந்துள்ளது. S.R. முருகவேல் செட்டியார் என்பவரையும், அவரது மகன் S.R.M.மனோகரன் என்பவரையும் எனக்கு தெரியும். என்னுடைய அப்பா பெயர் M.K.முத்து. என் தகப்பனாரின் கையொப்பத்தை நான் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.71–ல் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என் தகப்பனாருடையது. முருகவேல் செட்டியார் உயில் எழுதப்பட்ட சமயம் நல்ல திடகாத்திரமாக இருந்தார். முருகவேல் செட்டியார் அவருடைய வாரிசுகளுக்கு உயில் எழுதினார். உயில் எழுதப்பட்ட வருடம் 1997. முருகவேல் செட்டியார் 2001 ஆம் வருடம் இறந்துவிட்டார். மனோகரன் 25.01.2006 ஆம் தேதியில் அவரது வாரிசுகளுக்கு ஒரு உயிலை எழுதினார். மேற்சொன்ன மனோகரன் எழுதிய உயிலில் நான் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளேன். மனோகரன் எழுதிய உயில் குறித்த வழக்கு திண்டுக்கல் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்து அதிலும் உயிலின் அசலை காட்டி நான் சாட்சியம் அளித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.70 ஆவணம் மேற்சொன்ன மனோகரன் எழுதிய உயில் ஆவணத்தின் நகல் ஆகும். பி.வா.சா.ஆ.70 ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது. இந்த உயில் எழுதும்போது மனோகரன் நல்ல மனநிலையிலும், உடல்நிலையிலும் இருந்தார். முருகவேல் செட்டியாரும் எனது

தகப்பனாரும் நண்பர்கள். மனோகரனும், நானும் நண்பர்கள். 30.09.2020 ஆம் தேதியன்று எனது தகப்பனார் இறந்துவிட்டார். என் தகப்பனாரின் இறப்புச் சான்றை கொண்டு வந்துள்ளேன். 10.07.2023 ஆம் தேதி பதிவிறக்கம் செய்யப்பட்ட இறப்புச் சான்று சா.சா.ஆ.4. எனது ஆதார் அடையாள அட்டை நகல் சா.சா.ஆ.5.

<u>**குறுக்கு விசாரணை :**</u> வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2023.07.10 17:43:36 +0530

கூடுதல் சார்பு நீதிமன்றம்,

பழனி.